# 1

# மீட்பின் தேவன்



en பெயர் அட்லின், USA.

## என்னைப்பற்றி

சகோதரி கரோலின் அவர்களின் ஒரே தங்கை நான். எங்கள் தந்தை சிங்கப்பூரில் வேலை பார்த்ததால், சிறுவயது முதல் எதைக்குறித்தும் கவலையில்லாத ஒரு வசதியான வாழ்க்கை வாழ்ந்தேன். என் கணவர் அருள்தாஸ், ஒரு கணினி பொறியாளர். (Software Engineer) திருமணத்திற்குப் பிறகு, இரண்டு பெண்குழந்தைகளோடு குடும்பமாக சிங்கப்பூரில் வசித்தோம். அவருக்கு டல்லஸில் (USA) வேலை கிடைக்க, நாங்கள் USAவிற்குக் குடிபெயர்ந்தோம். பார்ட்டி, சினிமா, பொழுதுபோக்கு என உல்லாசமாக நாட்களைக் கழித்தோம். எனக்கு முப்பத்தெட்டு வயதாக இருக்கும்பொழுது, ஒருநாள் சறுக்கு விளையாட்டு செய்யும்பொழுது (Roller skates) கீழே விழுந்து, இடதுகையில் எலும்பு முறிவு ஏற்பட்டது.

மருத்துவர் 'எனக்கு பெரிய அறுவை சிகிச்சை செய்ய வேண்டும், அப்படியே செய்தாலும், என் கரத்தை முழுமையாக மடக்கவோ, நீட்டவோ முடியாது, குறுகிய அசைவே இருக்கும்' என்றனர். இதைக் கேட்டவுடன் நான் திகிலுற்றேன். 'இரண்டு சிறு பெண் குழந்தைகளோடு, இந்த சூழ்நிலையை எப்படி சமாளிப்பேன்' என்று மனமுடைந்து போனேன். இதனால் இரத்த அழுத்தம், இருதயப் படபடப்பு, தைராய்டு போன்ற வியாதியால் நான் பாதிக்கப்பட்டேன். மரணத்தை நெருங்குகிறோமோ என மிகவும் பயந்தேன்...

இந்த சூழ்நிலையில்தான், என் சகோதரிக்கு விண்ணக அனுபவம் ஏற்பட்டது. அப்பொழுது கடவுளின் வல்லமையைப் புரிந்து கொள்கிற ஞானம் எனக்கு இல்லை. ஆனால், என் அக்காவிடம் பல மாற்றங்கள் இருப்பதை உணர முடிந்தது. சகோதரி தன் இறையனுபவத்தைப் பகிரும்போது நான் பெரிதும் வியந்தேன்!!! எங்கள் குடும்பத்தில் ஒருவரை ஆண்டவர், ஓர் வல்லமையான போதகராக தேர்ந்தெடுத்ததை நினைத்து, இது உண்மையா! என்று திகைத்தேன். சகோதரி சொன்ன இறையனுபவங்கள் வாயிலாகவே, இறைவன் நம்முடன் வாழ்கிறார்; நம்மை அன்பு செய்கிறார்; அவருடைய பிரசன்னம் மட்டுமே முழு பாதுகாப்பைத் தரும்; ஆண்டவர் என்னுடைய வாழ்விலும் மாற்றங்களைச் செய்வார் என்று உணர ஆரம்பித்தேன்.

## பூரண சுகமும், விடுதலையும்

ஒவ்வொரு நாளும், அதிகாலையில் ஆண்டவர் சந்நிதியில் இருப்பதே, மட்டில்லாத மகிழ்ச்சியாக உணர்ந்தேன். ஆண்டவருக்கு அதிகநேரம் கொடுத்து, ஜெபத்தில் ஆழமாக செல்ல ஆரம்பிக்கும்போது, என் வியாதிகளை ஒவ்வொன்றாக ஆண்டவர் குணமாக்கத் தொடங்கினார். என் தொண்டையில் ஒரு சர்ப்ப வடிவிலான வீக்கத்தை, மருத்துவமனையில் பரிசோதித்ததில், 0-5க்குள் இருக்க வேண்டிய தைராய்டின் அளவு 70க்கு மேல் இருந்தது. மருத்துவர்,"கேன்சராக இருக்கலாம்" என்றார். உடனே சகோதரியிடம் தொலைபேசியில் எனக்காக ஆண்டவரிடம் ஜெபிக்க சொன்னேன். அவர் ஜெபித்துவிட்டு "விசுவசி, ஆண்டவர் உன் தைராய்டைக் குணமாக்குகிறார்" என்றார். எனக்கு இறையனுபவம் இல்லாததால், இது எப்படி நடக்கும்? என்று சிந்தித்தேன்.

சில நாட்களில் ஓர் தேவமனிதரின், குணமளிக்கும் நற்செய்திக் கூட்டம் நடைபெறுவதைக் கேள்விப்பட்டு, என் சகோதரியிடம் கூறியபோது "அங்கு சென்று அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்" என்றார்கள். நானும் நற்செய்திக் கூட்டத்தில் கலந்து கொண்டேன். ஜெபநேரத்தில் அந்த சகோதரர், என்